# <u>தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்</u>

## செய்தி வெளியீடு

**எண் 43 / 2021** **நாள் 14.08.2021**

2021 ஆம் ஆண்டு மே பருவத்திற்கான துறைத் தேர்வுகள் ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதியிலிருந்து நடைபெறவுள்ள நிலையில் இதற்கான நுழைவுச் சீட்டினை பல விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

ஆனால் சில நிர்வாக காரணங்களினால், ஏற்கெனவே பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான நுழைவுச் சீட்டு தற்போது சில திருத்தங்களுடன் மீள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மாற்றியமைக்கப்பட்ட நுழைவுச் சீட்டினை கீழ்க்காணும் இணையதள முகவரிகளில் தேர்வர்கள் அவர்களுடைய துறைத் தேர்வுகளுக்கான ஒரு முறைப் பதிவின் வழியாக தங்களுடைய விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்:

1. https://apply.tnpscexams.in/dept-exam-otr?app_id=UElZMDAwMDAwMQ==
2. www.tnpsc.gov.in

மாற்றியமைக்கப்பட்ட நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கூடங்களில் தேர்வு எழுத செல்லுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மேலும், மாற்றியமைக்கப்பட்ட நுழைவுச் சீட்டு இருந்தால் மட்டுமே தேர்வர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

**P. உமா மகேஸ்வரி,** இ.ஆ.ப

செயலாளர் (ம) தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)